சுருக்கம்

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைத் துறையினருக்காக "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்" ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்–4)த் துறை

**அரசு ஆணை (நிலை) எண்.246** **நாள்.16.10.2006**

படிக்கப்பட்டது:-

1)அரசு ஆணை (நிலை) எண்.66, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.20.3.1997
2)அரசு ஆணை (நிலை) எண்.85, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.28.4.1999
3)அரசு ஆணை (நிலை) எண்.78, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.11.4.2000
4)அரசு ஆணை (நிலை) எண்.144, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.28.9.2001

–––

ஆணை:

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைத் துறையினர் நலன் கருதி, அரசு உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிகைத் துறையில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பார்வையில் படிக்கப்பட்ட ஆணைகளின்படி முறையே ரூ.25,000/– ரூ.40,000/– ரூ.50,000/– ரூ.2,00,000/– என வழங்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. இத்திட்டம், 1997 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்" என அழைக்கப்பட்டு வருகிறது.

3. மேலும், இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டதற்கிணங்க பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி இருபது ஆண்டுகள் பணிபுரிந்து, பணியிலிருக்கும் கால கட்டத்தில் இறந்து விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் என்றும், பதினைந்து ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூபாய் ஒன்றரை இலட்சம் என்றும், பத்து ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூபாய் ஒரு இலட்சம் என்றும், ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூபாய் ஐம்பதாயிரம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப நல நிதி உதவி வழங்கும் புதுத் திட்டத்தை நிறைவேற்றி ஆணை வெளியிடப்படுகிறது.

4. பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி திட்டத்தில் உதவி பெறுவதற்கான விண்ணப்பம் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களிடம் உரிய இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

...2

5. பத்திரிகையாளர் ஓய்வூதியத்திற்கென நடைமுறையிலுள்ள பத்திரிகையாளர் ஓய்வூதியப் பரிசீலனைக் குழுவே இத்திட்டத்தின் கீழும் உதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை பரிசீலிக்கும் அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்படும்.

6. இத்திட்டத்திற்கான செலவினங்கள் "முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்" இருந்து வழங்கப்படும்.

7. இந்நிதி உதவித் திட்டம் 19.9.2006 முதல் அமல்படுத்தப்படும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.363/செ(ம)சு/2006, நாள்.11.10.2006ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில தலைமை கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை, சென்னை–2 (அரசிதழில் வெளியிட)
தலைமைக் கணக்காயர், சென்னை–9/5/35
நிதி (செ(ம)சு)த் துறை, சென்னை–9
நிதி (வரவு–செலவு)த்துறை, சென்னை–9.
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு–செலவு)த்துறை, சென்னை–9
நிதி (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி)த்துறை, சென்னை–9.
நகல்:-
அனைத்துத் துறை செயலாளர், சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
செய்தி–ஒலிபரப்புத் துறை அமைச்சகம்,இந்திய அரசு, புதுடெல்லி.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
அனைத்து பத்திரிகையாளர் சங்கங்கள், சென்னை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
உதிரிகள்/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/..
பிரிவு அலுவலர்.